# இயேசு உண்மையாகவே உலக இரட்சகரான வாக்களிக்கப்பட்ட மேசியாவா?

## அறிமுகம்

ஏன் இயேசுவைக் குறித்து கவலைக்கொள்ள வேண்டும்? அவருடைய பிறப்பு, அவருடைய வாழ்வு, அவர் செய்த அற்புதங்கள், அவருடைய வசனங்கள், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் அனைத்துமே இதுவரை உயிர் வாழ்ந்த மற்ற அனைவரிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

**தீர்க்கதரிசனங்களின் நோக்கங்கள்:**

வேதத்திலுள்ள தீர்க்கதரிசன செய்திகள் நாம் ஆச்சரியத்துக்குள்ளாகாமல் இருக்கவும் சந்தேகப்படாமல் இருக்கவும் வழங்கப்பட்டுள்ளன. இயேசு சொன்னார், யோவான்14:29, "இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்குமுன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்.''

பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசினங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதை ஒப்பிடும்போது அது யார் மேசியா என்பதை நிர்ணயிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

(ஆண்டவரிடமிருந்து வரும் ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறவேண்டும் ஏனெனில் ஆண்டவர் பொய் சொல்வதில்லை. ஜோசியம் பார்த்தல் மனிதனிடம் இருந்து வருவதால் அது நிறைவேறுவது என்பது அதிர்ஷ்டத்தைச் சார்ந்துள்ளது.)

இந்தக் கருத்தைத் அடிப்படையாக்க கொண்டு, மேசியாவைப் பற்றிய மூன்றுதீர்க்கதரிசனங்களை நாம் கண்ணோட்டமிடுவோமாக.

## I தீர்க்கதரிசனங்களும் அவை நிறைவேறுதலும்

❑ **தீர்க்கதரிசனம் 1:** மேசியாவைப் பற்றி சாட்சிக் கூறுவதற்கு அவருக்கு முன்னோடியாக வருகிற தூதுவர். (750 கி.மு.) ஏசாயா40:3-5, "கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவைச் சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று''.

♦ **அறிவிப்பு:** (நிறைவேறுதலுக்கு முன்பு): தூதுவரின் அதிசயமான கருவுருதல். (1 கி.மு.) சகரியா என்னும் ஆசாரியன் ஆலயத்தில் தூபங்காட்டுகிறபோது கர்த்தருடைய தூதன் ஒருவன் அவனுக்குத் தரிசனமானான். அப்போது சகரியா அவனைக்கண்டு கலங்கி, பயமடைந்தான், ஆனால் தூதன் அவனை நோக்கி இவ்வாறு கூறினான்,

- "சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக .. ..ஜனத்தைக்கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, ..அவருக்கு முன்னே நடப்பான்.'' அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி இவ்வாறு கூறினான்:
- "இதை நான் எதினால் அறிவேன்' நான்கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே'' (குழந்தை பெறும் வயதைக் கடந்தவளாய்). (அவள் மலடியாயிருந்தாள் என்று வசனம் 7 கூறுகிறது) .அப்போது தேவதூதன் அவனிடம் இவ்வாறு கூறினான்,
- லூக்கா 1:19-22, "நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்' உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்' இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான். அவன் வெளியே வந்தபோது அவர்களிடத்தில் பேசக்கூடாமலிருந்தான்' அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டானென்று அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச் சைகை காட்டி ஊமையாயிருந்தான்''.

⇨ **நிறைவேறுதல்:** தூதுவரின் பிறப்பு (1 கி.மு.)

- லூக்கா 1:57-64,"எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். அதின் தகப்பனை நோக்கி : இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள். . . .இவன் பேர் யோவான் என்று எழுதினான் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்''.
- லூக்கா 3:3, (ஏசாயா ஆகமத்தில் 40:3-5, யில் எழுதியிருக்கிறபிரகாரம்) "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்".

லூக்கா 3:21-22,யோர்தான் நதியில் நிறைய ஜனங்கள் யோவானால் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசுவும் யோவானால் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் (இயேசு) இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்; என்று உரைத்தது. தேவன் இயேசுவைத் தமது நேச குமாரன் என்று அறிவித்தபோது யோவான் அங்கு ஒரு சாட்சியாக நின்றார். இது தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது.

❑ **தீர்க்கதரிசனம் 2:** மேசியா பிறந்த இடம்

மேசியாவின் பிறப்புக்கு நூறாண்டுகளுக்கு முன்பே அவர் எங்கு பிறப்பார் என்பதை மீகா தீர்க்கதரிசி எழுதினார் (750 கி.மு.) மீகா 5:2, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார், அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது''. மேசியா பிறக்கும் சரியான இடத்தை இந்தத் தீர்க்கதரிசனம் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது.

♦ **அறிவிப்பு:** குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது.

லூக்கா 2:1-3,"அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியாநாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்''. (2 கி.மு.)

**நிறைவேறுதல்:** மரியாளும் யோசேப்பும் குடிமதிப்பு கட்டளையின்படி எழுதினர் (1 கி.மு.)
லூக்கா 2:4-5,"அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியான நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்".

- **தீர்க்கதரிசனம் 3:** மேசியாவின் கன்னிப் பிறப்பு, அவராக இருப்பவரை கண்டுகொள்ளக்கூடிய அதிசயமான அடையாளம்

வாக்களிக்கப்பட்ட மேசியாவின் பிறப்புக்கு 750 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசி ஆண்டவரின் ஏவுதலின்படி இவ்வரிகளை எழுதினார்: ஏசாயா 7:14, "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் (தேவன் நம்மோடிருக்கிறார் என்பது அர்த்தமாகும்) என்று பேரிடுவாள்".

- **அறிவிப்பு:** (பிறப்புக்கு முன்பு): மேசியாவின் கருத்தறிப்பு (1 கி.மு.) மத்தேயு 1:18-20, இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் விவரமானது: "அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள்கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு". மத்தேயு 1:21-22, "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது". மத்தேயு 1:24-25,"யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டடையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து....".

⇨ **நிறைவேறுதல் :** மேசியாவின் பிறப்பு
லூக்கா 2:6-7 (1கி.பி.),"அவ்விடத்திலே (பெத்லகேம்) அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்". மத்தேயு1:25,"அவருக்கு 'இயேசு' என்று பேரிட்டான் (யோசேப்பு)".
***தீர்க்கதரிசனம் 1***, மேசியா பிறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தூதுவர் யோவான், பிறந்தபோது நிறைவேறியது. (லூக்கா 1:36-45).
***தீர்க்கதரிசனம் 2-ம் 3-ம்,*** கன்னி மரியாள் பெத்லகேமில் ஒரு குமாரனை ஈன்றபோதும், ஆண்டவரின் கட்டளையின்படி அவருக்கு இயேசு என்று பெயரிட்டபோதும் ஒரே சமயத்தில் நிறைவேறின. இது அதிசயமும் சிறிதும் நம்ப முடியாததுமாய் இருக்கிறது! ஆனால் ஆண்டவரால் கூடாதது ஒன்றுமில்லை! இன்னும் அதிக செய்திகள் அறிவதற்கு மத்தேயுவின் சுவிசேஷத்தைப் படியுங்கள்.

**II இயேசு செய்த அற்புதங்கள:** அவரே மேசியா என்பதற்குச் சாட்சி கொடுக்கின்றன. (லூக்கா 7:22). (**மந்திரவித்தைகள்** மனித சாகசகங்களால் செய்யப்படுகின்றன. **அற்புதங்கள்** ஆண்டவரின் மகத்துவமான வல்லமையினால் செய்யப்படுகின்றன.) சிலவற்றைக் கூறுவோமானால்,

- தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார் (யோவான் 2:11).
- பிசாசு பிடித்தவன் ஆலயத்தில் குணமாகிறான் (லூக்கா 4:34).
- ஒரு விதவையின் மகன் மரணத்திலிருந்து எழுப்பட்டான் (லூக்கா 7:14-15).
- லாசரு மரணத்திலிருந்து எழுப்பட்டான் (யோவான் 11:41-44).
- பெருங்காற்று அமைதல் அடைந்தது (மத்தேயு 8:27).
- பிறவி குருடன் பார்வையடைந்தான் (யோவான் 9:33).
- செவிடும் ஊமையுமானவன் குணமாகிறான் (மாற்கு 7:35).

இந்த அற்புதங்களைக் கண்டவர்கள் இவ்வாறு கூறினர் : யோவான் 9:32-33,***"பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே"***

**III உயிர்த்தெழுதல்: இயேசு மரணத்தின் மேல் அதிகாரம் உள்ளவர்** என்பதை அவருடைய உயிர்த்தெழுதுதல் உறுதிசெய்கிறது.
மத்தேயு 28:5-6,"தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்".
ரோமர் 1:4,"..தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்".
அருமை நண்பரே, இயேசு, தாமே வாக்களிக்கப்பட்ட மேசியாவும் உலக இரட்சகரும் என்பதை சிறிதளவும் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபித்துவிட்டார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). என்றும் மேலும் அவர் கூறியுள்ளார்.
இப்போதும் நாம் அவரை ஏற்றுக்கொள்கிறோமா இல்லையை என்பது நமது முடிவில் உள்ளது.; "நான் எப்படி இயேசுவை எனது சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்வது?" என்று ஒரு வேளை நீங்கள் கேட்கலாம்.

மலும் விவரங்களுக்கு 82603528 என்ற எண்ணில் சு. சங்கரன் என்பவரைத்
தொடர்புகொள்ளவும். மின் அஞ்சல்:
nedungat@gmail.com
டிச ளரசக: www.amazingdiscovery.net
தொடர்ந்து கிறிஸ்துவ வாழ்வில்
வளர்ச்சி அடைய இயேசுவை கனம்பண்ணுவதோடு
வேதாகமத்தைக் கற்றுத்தரக்கூடிய, அருகாமையில் உள்ள
ஒரு சபைக்குத் தொடர்ந்து செல்.